சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2018–19–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – "மாவட்ட மைய நூலகங்களைத் திறன்மிகு நூலகங்களாக மேம்படுத்துதல்" – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (பொ.நூ.2)த்துறை

அரசாணை (நிலை) எண்.130 நாள் 04.07.2018

திருவள்ளுவராண்டு, 2049
விளம்பி வருடம், ஆனி–20

படிக்கப்பட்டவை:–

பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண். 6803/எ2/2018, நாள் 11.06.2018 மற்றும் 14.06.2018

~*~~*~

ஆணை:–

2018–19–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மைய அரசின் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் பல்வேறு தேர்வுகள் மற்றும் பல்துறை சார்ந்த போட்டித் தேர்வுகளுக்குத் தேவைப்படும் நூல்கள் அனைத்தையும் பதிவிறக்கம் செய்து கொள்ளவும், மாநில, தேசிய மற்றும் உலகளாவிய செய்தித்தாள்கள், இதழ்கள் மற்றும் பல்வகையான நூல்களைப் படிக்கவும் ஏதுவாக அனைத்து மாவட்ட மைய நூலகங்களும் திறன்மிகு நூலகங்களாக மேம்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டத்திற்கு ரூ.16 இலட்சம் செலவிடப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலும் மேம்படுத்தப்பட்ட செயலியினை நிர்மாணம் செய்வதன் மூலம் அனைத்து மாவட்ட மைய நூலகங்களையும் திறன்மிகு (Smart) நூலகங்களாக மேம்படுத்தலாம் என்றும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மைய அரசின் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் பல்வேறு தேர்வுகள் மற்றும் பல்துறை சார்ந்த போட்டித் தேர்வுகளுக்குத் தேவைப்படும் நூல்கள் அனைத்தையும் பதிவிறக்கம் செய்து கொள்ளவும், மாநில, தேசிய மற்றும் உலகளாவிய செய்தித்தாள்கள், இதழ்கள் மற்றும் பல்வகையான நூல்களைப் படிக்கவும் ஏதுவாக, மேம்படுத்தப்பட்ட செயலியினை அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் பொருத்தவும், மாவட்டத்திற்கு ரூ.50,000/– வீதம் 32 மாவட்டத்திற்கு ஆண்டொண்டிற்கு ஏற்படும் செலவினத் தொகை ரூ.16,00,000/–ஐ (50,000 x 32 = ரூ.16,00,000/– (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) அனைத்து மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ளவும் அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

(த.பி.பா.)

3. பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, 2018–2019ஆம் ஆண்டின் அறிவிப்பான “மாவட்ட மைய நூலகங்களைத் திறன்மிகு நூலகங்களாக மேம்படுத்துதல்” என்ற அறிவிப்பினை செயல்படுத்திட, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மைய அரசின் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் பல்வேறு தேர்வுகள் மற்றும் பல்துறை சார்ந்த போட்டித் தேர்வுகளுக்குத் தேவைப்படும் நூல்கள் அனைத்தையும் பதிவிறக்கம் செய்து கொள்ளவும், மாநில, தேசிய மற்றும் உலகளாவிய செய்தித்தாள்கள், இதழ்கள் மற்றும் பல்வகையான நூல்களைப் படிக்கவும் ஏதுவாக, அனைத்து மாவட்ட மைய நூலகங்களையும் திறன்மிகு நூலகங்களாக மேம்படுத்திட, மேம்படுத்தப்பட்ட செயலியினை அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் பொருத்தவும், மாவட்டத்திற்கு ரூ.50,000/– வீதம் 32 மாவட்டத்திற்கு ஆண்டொண்டிற்கு ஏற்படும் செலவினத் தொகை ரூ.16,00,000/–ஐ (50,000 x 32 = ரூ.16,00,000/– ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) அனைத்து மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2118/கூ.த.செ.(நிதி)/2018, நாள் 20.06.2018ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை – 2.
<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைத் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.